**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(16.05.2026 முதல் 20.05.2026)**

**அறிக்கை எண் 13/2026** **தேதி. 15.05.2026**

**மயிலாடுதுறை மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

மயிலாடுதுறை மாவட்டத்தின் 12.05.2026 முதல் 15.05.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 32 - 34 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 88 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 8 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் தென் கிழக்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை மயிலாடுதுறை (16.05.2026 முதல் 20.05.2026)**

| கடந்த வார வானிலை (12.05.2026 முதல் 14.05.2026) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 20.05.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 12/05 | நாள்-2 13/05 | நாள்-3 14/05 | தேதி | நாள்-1 16/05 | நாள்-2 17/05 | நாள்-3 18/05 | நாள்-4 19/05 | நாள்-5 20/05 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 26 | 24 | 4 | 3 | 3 |
| 33 | 34 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 30 | 29 | 28 | 27 | 27 |
| 26 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 23 | 23 | 23 |
| 6 | 6 | 8 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 6 | 5 | 6 |
| 83 | 80 | 95 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 100 | 90 | 80 | 80 | 80 |
| 78 | 80 | 88 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 90 | 80 | 60 | 50 | 60 |
| 4 | 0 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 8 | 12 | 10 | 12 | 12 |
| கிழக்கு தென் கிழக்கு | வடக்கு | தென் கிழக்கு | காற்றுவீசும் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் கிழக்கு | தென் தென் மேற்கு |

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 16.05.2026 முதல் 20.05.2026 ஆகிய தினங்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 27 - 30 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 - 25 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 100 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| **பொது** | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| | | வடிகால் வாய்க்கால்களை பன்னை குட்டையுடன் முறையாக இணைத்து மழை நீரை எளிதாக வடிப்பதுடன் மழை நீரை சேமிக்கவும் முடியும். |
| **நெல்** | **நடவு வயல்** | வானிலையை கருத்தில் கொண்டு, கோடை நெற்பயிரில் முதல் கைக்களையை 20 – 25 நாட்களுக்குள் எடுக்கவும். |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **ஆடு மற்றும் மாடு** | 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும். |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**